1. BC/MBC, SC/ST உதவித்தொகைக்கு விண்ணப்பித்த அனைவரும் உழவர் உதவித்தொகைக்கும் விண்ணப்பிக்கலாம்.

2. முதலாம் ஆண்டில் BC/MBC, SC/ST விண்ணப்பிப்பதற்கு New Form (புதியது) எடுத்து விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

3. முதலாம் ஆண்டு BC/MBC, SC/ST உதவித்தொகைக்கு விண்ணப்பித்தவர்கள் Renewal Form (புதுப்பித்தல்) எடுத்து இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுக்கு விண்ணப்பிக்கவும்.

4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை காலதாமதமின்றி உரிய அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். காலம் தவறினால் உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க இயலாது.

5. கூடுமானவரை முதலாம் ஆண்டிலேயே புதிதாக விண்ணப்பித்துக் கொள்ளவும். இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டில் விண்ணப்பித்தால் அரசாங்கம் தங்களது விண்ணப்பத்தினை Cancel செய்து உதவித்தொகை கிடைக்காமல் இருப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது.

6. Self Finance ல் படிப்பவர்கள் BC/MBC/DNC உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க முடியாது, உழவர் அட்டை இருப்பின் உழவர் உதவித்தொகைக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

7. முஸ்லிம், கிறிஸ்தவர்கள் மற்றும் மதம் மாறிய கிறிஸ்தவர்கள் அனைவரும் (Aided and Self Finance) National Scholarship Portal—ல் Minority Scholarship—க்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

8. முதலாம் ஆண்டில் விண்ணப்பித்திருப்பின் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டில் Renewal Form பதிவிறக்கம் செய்து ஒவ்வொரு வருடம் செப்டம்பர் மாதத்திற்குள் விண்ணப்பத்தினை அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

9. வருமானச் சான்றிதழ் ஒவ்வொரு வருடமும் புதியதாக வாங்கி இணைக்க வேண்டும்.

10. Minority Scholarship விண்ணப்பிப்பவர்கள் Online மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். நமது கல்லூரியில் இயங்கி வரும் E-Service சேவை மையத்தில் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

11. முதலாம் ஆண்டில் விண்ணப்பிக்க தவறியவர்கள் இரண்டாம் ஆண்டில் புதிய விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் மூன்றாம் ஆண்டில் விண்ணப்பிக்க இயலாது.